# சாதிவாரி கணக்கெடுப்பு - ஏன் அவசியம்?

## அசோக் வர்தன் ஷெட்டி ஐ.ஏ.எஸ். (ஓய்வு)

**சென்னை, ஜூலை 19-**

**‘மக்கள்தொகை கணக்கெடுப்பு சட்டம், 1948ஐ, ஒன்றிய அரசின் விருப்பத்திற்கு விட்டுவிடாமல், சாதி வாரியான கணக்கெடுப்பைக் கட்டாயமாக்கும் வகையில் திருத்தம் செய்யப்பட வேண்டும். வழக்கமான மக்கள்தொகை கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக இதுபோன்ற தரவு சேகரிக்கப்படலாம்’ என்று ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி கே. அசோக் வர்தன் ஷெட்டி - அவர்கள் ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் கட்டுரை எழுதியுள்ளார்.**

அக்கட்டுரை வருமாறு :-

பீட்டர் ட்ரக்கர் என்பவர் “அளக்கப்படுவது மட்டுமே நிர்வகிக்கப்படும்.” என்று குறிப்பிடுவார். வரலாற்று ரீதியாக பாகுபாடு காட்டப்பட்ட சமூக குழுக்களின் பிரச்சனைகள் (அது சாதி, இனம், மதம், பாலினம், ஊனம் அல்லது எதுவாக இருந்தாலும்) குழு அடையாளத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு குழு வாரியாக தரவுகளை சேகரிக்காமல் தீர்க்க முடியாது. அவ்வாறு செய்வது அடையாள அரசியலுக்கு சரணடைவது அல்ல; அது தகவலறிந்த கொள்கை உருவாக்கம், உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த சமூகத்தை நோக்கிய ஒரு முக்கிய படியாகும்.

உதாரணமாக, ஜெர்மனியின் மக்கள் தொகை கணக்கெடுப்பு மக்களை இனத்தின் அடிப்படையில் கணக்கிடுவதில்லை. இது அதன் கறுப்பின மக்களுக்கு பாதகமாக செயல்பட்டது. அவர்கள் 2020 இல் அஃப்ரோசென்சஸ் (Afrozensus) என்ற தனியார், நாடு தழுவிய ஆன்லைன் கணக்கெடுப்பைத் தொடங்கினர். அதன் முடிவுகள் ஜெர்மனியில் கறுப்பர்களுக்கு எதிரான இனவெறி பரவலாகவும் நிறுவன ரீதியாகவும் வேரூன்றியுள்ளது என்பதைக் காட்டுகிறது. இதேபோல், இந்தியாவின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சாதியைக் கணக்கிடக் கூடாது என்ற முடிவு சாதிய ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்தியுள்ளது. இது சுதந்திர இந்தியாவின் மிகப்பெரிய தவறுகளில் ஒன்றாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

ரோமானிய அரசியல்வாதி சிசரோ, ‘குய் போனோ’ (இதனால் யாருக்கு லாபம்?) என்று கேட்பார். அவரது கேள்வியைப் பயன்படுத்தினால், கணக்கெடுப்புக்கான கோரிக்கை பொதுவாக பாகுபாட்டால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து எழுகிறது மற்றும் சுயநலவாதிகளால் எதிர்க்கப்படுகிறது என்று கூறலாம். பிந்தையவர்கள் தங்களின் உண்மையான நோக்கத்தை மறைக்க, பெரும்பாலும் தேசிய ஒற்றுமை அல்லது சமூக நல்லிணக்கம் போன்ற சில உயர்ந்த இலட்சியங்களை கூறுவார்கள்.

### சாதிவாரி கணக்கெடுப்பு எதற்கு?

இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சாதியைக் கணக்கிடுவது நான்கு காரணங்களுக்காக முக்கியமானது :-

**முதலாவதாக;** இது ஒரு சமூக கட்டாயம். இந்தியாவில் சாதி என்பது ஒரு அடிப்படை சமூகக் கட்டமைப்பாகத் தொடர்கிறது. 2011-12ல் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பின்படி, இந்திய திருமணங்களில் 5 சதவீதம் மட்டுமே சாதிகளுக்கு இடையேயான திருமணங்கள். சாதிய குடும்பப்பெயர்கள் மற்றும் சாதி அடையாளங்களை உடலில் பயன்படுத்துவது இன்னும் பரவலாக உள்ளது. பெரும்பாலான கிராமங்களிலும் பல நகரங்களிலும் சாதியின் அடிப்படையில் குடியிருப்புப் பிரிவினை நீடிக்கிறது. தேர்தலுக்கான வேட்பாளர்களும், மந்திரிசபைக்கான அமைச்சர்களும் முக்கியமாக சாதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சாதியை ஒழிப்பதில் அரசு தீவிரம் காட்டினால், இந்தப் பிரச்னைகளில் கவனம் செலுத்த வேண்டும்; மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சாதியைக் கணக்கிடாமல் இருப்பது தீர்வாகாது.

**இரண்டாவதாக;** இது ஒரு சட்டபூர்வமான கட்டாயம். தேர்தல் தொகுதிகள், கல்வி மற்றும் பொது வேலைவாய்ப்பு ஆகியவற்றில் இடஒதுக்கீடுகளை உள்ளடக்கிய சமூக நீதிக்கான அரசியலமைப்பு கட்டாயக் கொள்கைகள் விரிவான சாதி வாரியான தரவு இல்லாமல் திறம்பட தொடர முடியாது. அரசியலமைப்புச் சட்டம் சாதி என்பதற்குப் பதிலாக வர்க்கம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தினாலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை வரையறுப்பதற்கு ஜாதியை ‘தொடர்புடைய அளவுகோல்’, ‘ஒரே அளவுகோல்’ அல்லது ‘ஆதிக்க அளவுகோல்’ என உச்ச நீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புகள் கூறி, சாதி வாரியாக விரிவான கோரிக்கையை முன்வைத்துள்ளன. இது இட ஒதுக்கீடு கொள்கைகளை நிலைநிறுத்து வதற்கான தரவு.

**மூன்றாவதாக;** இது ஒரு நிர்வாக கட்டாயம். தகுதியற்ற சாதிகளை தவறான முறையில் சேர்ப்பதையும், தகுதியுள்ள சாதிகளை தவறாக ஒதுக்குவதையும் தவிர்க்கவும்/திருத்தவும், ஒதுக்கப்பட்ட பிரிவில் உள்ள ஒரு சில ஆதிக்க சாதிகள் பிற சாதிகளை ஒதுக்கப்படுவதைத் தவிர்க்கவும் விரிவான சாதி வாரியான தரவு அவசியம். ஒதுக்கப்பட்ட பிரிவினுள் உள்ள சாதிகளை துணைப்பிரிவு செய்வதற்கும், கிரீமிலேயருக்கு வருமானம்/செல்வம் அளவுகோலை நிர்ணயம் செய்வதற்கும் இது தேவைப்படுகிறது.

**நான்காவதாக;** இது ஒரு தார்மீக கட்டாயம். விரிவான ஜாதி வாரியான தரவு இல்லாதது, உயர் சாதியினர் மற்றும் மேலாதிக்க இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC கள்) மத்தியில் உள்ள உயரடுக்கினருக்கு, நாட்டின் சொத்துக்கள், வருமானங்கள் மற்றும் அதிகாரப் பதவிகளில் விகிதாசாரமற்ற பங்கைப் பெற உதவியது. இது பெரும்பான்மையினராக உள்ள தாழ்த்தப்பட்ட சாதியினருக்குப் பாதகமாக அமைந்தது.

பிரிட்டிஷ் இந்தியாவில், 1881 முதல் 1931 வரையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பில் அனைத்து சாதியினரும் கணக்கிடப்பட்டனர். 1951 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பிறகு நடத்தப்பட்ட முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில், சாதியைக் கணக்கிடக் கூடாது என்று இந்திய அரசு உத்தரவிட்டது. இருப்பினும், பட்டியல் சாதியினர் (SC) மற்றும் பழங்குடியினர் (ST) ஆகியவற்றுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. 1951 முதல் ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்பிலும் அவர்கள் கணக்கிடப்படுகின்றனர். 1961 ஆம் ஆண்டில், இந்திய அரசு மாநிலங்கள் விரும்பினால் தங்கள் சொந்த கணக்கெடுப்புகளை நடத்தவும், மாநிலகுறிப்பிட்ட OBC பட்டியல்களைத் தயாரிக்கவும் அறிவுறுத்தியது. அந்த நேரத்தில் மத்திய அரசிலும் அதன் நிறுவனங்களிலும் OBC களுக்கு இட ஒதுக்கீடு இல்லை.



### சாதிக் கணக்கெடுப்புக்கு எதிரான வாதங்கள்!

சாதிவாரி கணக்கெடுப்புக்கு எதிராக பல கருத்துக்கள் உள்ளன.

**வாதம் 1:** இது சமூகத்தை பிளவுபடுத்துகிறது. இந்தியாவின் சமூகப் பிரிவுகள் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முயற்சிகளுக்கு ஏறக்குறைய 3,000 ஆண்டுகளுக்கு முந்தியவை. 1951 முதல் பட்டியலின மற்றும் பழங்குடியின மக்கள்தொகை கணக்கெடுப்பு இந்த சாதிகள் அல்லது பழங்குடியினரிடையே எந்த முரண்பாடுகளுக்கும் வழிவகுக்கவில்லை. மேலும், இந்தியாவின் மக்கள்தொகை கணக்கெடுப்பு மதம், மொழி மற்றும் பிராந்தியம் ஆகியவற்றைக் கணக்கிடுகிறது. இவை சாதியைப் போலவே அல்லது அதற்கும் மேலாக பிரிவினையை உண்டாக்குகின்றன என்றால் மிகையாகாது. மதம், மொழி, பிரதேசத்தை எண்ணிப் பார்க்காததால் வகுப்புவாதம், மொழி வெறி, பிராந்திய வெறி ஆகியவை மறைந்துவிடாது என்பது போல, மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சாதியைக் கணக்கிடாததால் மட்டும் சாதி வெறி ஒழிந்துவிடாது.

**வாதம் 2:** இது ஒரு நிர்வாகக் கனவு. இதை செயல் படுத்துவது ஒரு கெட்ட கனவைப் போல. இனம் என்பது ஒரு தெளிவற்ற கருத்தானாலும் அமெரிக்கா உட்பட பல நாடுகளில் இன்னும் கணக்கிடப்படுகிறது, ஒருவருடைய சாதியைப் பற்றி சிறிதும் தெளிவின்மை இல்லை. பட்டியலின பிரிவில் 1,234 சாதிகளையும், பழங்குடியின பிரிவில் 698 பழங்குடியினரையும் ஒன்றிய அரசால் சுமூகமாகக் கணக்கிட முடிந்தது. எனவே, 4,000க்கும் மேற்பட்ட பிற சாதிகளின் கணக்கெடுப்பு, அவற்றில் பெரும்பாலானவை மாநிலம் சார்ந்தவை, ஏன் தீர்க்க முடியாத சிக்கலை ஏற்படுத்த வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வது கடினம்.

**வாதம் 3:** இது இடஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கான கோரிக்கைகளை தூண்டும். மாறாக, துல்லியமான சாதி வாரியான மக்கள்தொகைக் கணக்கெடுப்புத் தரவுகள் இருந்தால், சாதிக் குழுக்களின் தன்னிச்சையான கோரிக்கைகளையும், அரசுகள் தன்னிச்சையாக முடிவெடுப்பதையும் கட்டுப்படுத்த உதவும். கொள்கை வகுப்பாளர்கள், மராத்தியர்கள், படிதார்கள், ஜாட்கள் அல்லது இடஒதுக்கீடுகளுக்கான வேறு எந்தக் குழுக்களின் உரிமைகோரல்களையும் புறநிலையாக விவாதிக்கவும் மற்றும் தீர்க்கவும் முடியும். ஆனால் அரசாங்கங்கள் தெளிவற்ற தரவுகளை விரும்புகின்றன, ஏனெனில் அது தேர்தல் ஆதாயங்களுக்காக தன்னிச்சையாக இடஒதுக்கீட்டைச் செயல்படுத்தும் சுதந்திரத்தை வழங்குகிறது.

### மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஏன் OBC கணக்கிடப்பட வேண்டும்?

எஸ்.சி. மற்றும் எஸ்.டி.களைப் போலவே, ஓ.பி.சி.களுக்கும் கல்வி (பிரிவு 15(4)) மற்றும் பொது வேலைவாய்ப்பில் (பிரிவு 16(4)) இடஒதுக்கீட்டை அரசியலமைப்பு அனுமதிக்கிறது. நாட்டின் பல பகுதிகளில், ஓபிசியினர் சுதந்திரத்திற்கு முன்பே இடஒதுக்கீட்டை அனுபவித்து வந்தனர். எனவே, 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஓபிசியும் கணக்கிடப்பட்டிருக்க வேண்டும்.

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்திய பிறகு, ஒன்றிய அரசு மற்றும் அதன் நிறுவனங்களிலும் ஓ.பி.சி.கள் இடஒதுக்கீட்டை அனுபவிக்கின்றனர். இந்திரா சாவ்னி (Indra Sawhney) வழக்கில் (1992), ஓபிசி பட்டியல் (இது 1931 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில்) அவ்வப்போது திருத்தப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

எஸ்.சி., எஸ்.டி போன்று எம்.பி., எம்.எல்.ஏ.க்களுக்கு தேர்தல் தொகுதிகளில் ஓ.பி.சி.களுக்கு இட ஒதுக்கீடு இல்லை. ஆனால் 73வது மற்றும் 74வது திருத்தங்களுக்குப் பிறகு (1993), எஸ்.சி. மற்றும் எஸ்.டி.களுக்கு மட்டுமின்றி ஓ.பி.சி. களுக்கும் பஞ்சாயத்து மற்றும் நகராட்சிகளில் தேர்தல் தொகுதிகளில் இடஒதுக்கீடு அளிக்க அரசியலமைப்பு வழங்குகிறது (பிரிவு 243D(6) மற்றும் 243T(6)). இதற்கு, சாதி வாரியாக, பகுதி வாரியாக ஓ.பி.சி.களின் மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவு அவசியம். எனவே, ஒன்றிய அரசு குறைந்தபட்சம் 2001 மக்கள்தொகை கணக்கெடுப்பில் ஓ.பி.சி.களை கணக்கெடுத்திருக்க வேண்டும். ஆனால் செய்யவில்லை.

உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஒடிசா, ஜார்கண்ட் போன்ற மாநிலங்கள் உள்ளாட்சித் தேர்தலில் ஓ.பி.சி.யினருக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்த முயன்ற போதெல்லாம், சாதி வாரியான தரவு இல்லாத காரணத்திற்காக உயர்நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றமும் தடை விதித்தன. நாட்டின் ஒரு பிரிவு நீதித்துறை இடஒதுக்கீட்டைப் பராமரிக்க சாதி வாரியான தரவுகளைக் கோருகிறது, மற்றொன்று மத்திய அரசு அதே தரவுகளை எண்ணுவதைத் தவிர்ப்பதற்கான காரணங்களைக் கண்டுபிடிக்கிறது!

எவ்வாறாயினும், OBCகள், SCக்கள் மற்றும் STகள் தவிர பிற மக்களிடையே (திறம்பட, உயர்சாதியினர்) பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கு (EWS) 10% இடஒதுக்கீடு எந்த அனுபவபூர்வமான தரவுகளும் இல்லாத போதிலும் 2022 இல் உச்ச நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்டது. EWS இடஒதுக்கீட்டைக் கருத்தில் கொண்டு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 1931 வரை இருந்ததைப் போலவே உயர்சாதியினர் உட்பட அனைத்து சாதிகளையும் இப்போது கணக்கிட வேண்டும்.

மக்கள்தொகை கணக்கெடுப்பு ஒரு மையப் பொருளாகும், ஆனாலும், புள்ளியியல் சேகரிப்புச் சட்டம், 2008, தேவையான தரவுகளைச் சேகரிக்க மாநிலங்களுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அதிகாரம் அளிக்கிறது. எனவே, கர்நாடகா (2015) மற்றும் பீகார் (2023) போன்ற சாதிவாரி கணக்கெடுப்புகளை தனிப்பட்ட மாநிலங்கள் எப்போதும் நடத்தலாம். ஆனால் மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவு அதிக நம்பகத்தன்மை கொண்டது மற்றும் குறைவான சர்ச்சைக்குரியது. இந்திய அரசு 1992 முதல் OBC மற்றும் 2019 முதல் EWS இட ஒதுக்கீட்டை செயல்படுத்தி வருகிறது. எனவே, மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் சாதியைக் கணக்கிடுவதில் அதன் தயக்கம் சட்டரீதியாக தவறானது மற்றும் நிர்வாக ரீதியாக விவேகமற்றது.

### சாதிவாரி கணக்கெடுப்பு முயற்சி எப்படி தோல்வியடைந்தது?

ஓ.பி.சி. தலைவர்களின் கணிசமான பரப்புரைக்குப் பிறகு, 2010 இல், 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக சாதியைக் கணக்கிட வேண்டும் என்று நாடாளுமன்றம் ஒருமனதாக ஒரு தீர்மானத்தை (காங்கிரஸ் மற்றும் பி.ஜே.பி. இரண்டும் சேர்ந்து) நிறைவேற்றியது. 1931 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, சாதி கடைசியாக கணக்கிடப்பட்டபோது, இந்தியாவில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/தீண்டத்தகாதவர்கள் (அப்போது அவர்கள் அப்படி அழைக்கப்பட்டனர்) தவிர 4,147 சாதிகள் இருந்தன. துரதிர்ஷ்டவசமாக, சமூகப் பொருளாதாரம் மற்றும் சாதிக் கணக்கெடுப்பு (SECC)2011 மோசமாக வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது, 46 லட்சம் சாதிகள் என்ற கேலிக்குரிய எண்ணிக்கையை தூக்கி எறிந்து, முடிவுகள் வெளியிடப்படவில்லை. ஒரு பொன்னான வாய்ப்பு பறிபோனது.

SECC2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்புச் சட்டம், 1948ன் கீழ் நடத்தப்படாததால், செயலிழந்தது. சாதியை ஒரு அளவுகோலாக சேர்க்க சட்டம் திருத்தப்படவில்லை. சமூகவியல்/மானுடவியல் ஆய்வுகளை மேற்கொள்வதில் முன் அனுபவம் இல்லாத, ஊரக வளர்ச்சி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகங்கள் மூலம் இது நடத்தப்பட்டது. கூடுதலாக, கேள்வித்தாள் மோசமாக வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் சாதி பற்றிய திறந்த கேள்விகள் கேட்கப்பட்டன. உண்மையான சாதிகள், மாற்று சாதிப் பெயர்கள், பெரிய சாதிக் குழுக்கள், துணை சாதிகள், குடும்பப்பெயர்கள், குலப்பெயர்கள், கோத்திரங்கள் போன்றவற்றைக் கணக்கெடுப்பாளர்களால் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை.

இதற்கு நேர்மாறாக, 2023 இல் நடத்தப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பை பீகார் அரசாங்கம் மிக சிறப்பாக செய்தது. பீகாரில் குறிப்பிட்ட 214 சாதிப் பெயர்களின் பட்டியலை அது கணக்கெடுப்பாளர்களுக்கு வழங்கியது, மேலும் 215வது பிரிவை “பிற சாதிகள்” என்று பெயரிட்டது. ஆங்கிலேயர்களாலும், பீகார் அரசாலும் சாதிவாரிக் கணக்கெடுப்பை வெற்றிகரமாக நடத்தமுடியும் போது, இந்திய அரசால் ஏன் அதைச் செய்ய முடியாது?

2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், அடுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக சாதியைக் கணக்கிட மாட்டோம் என்று 2021ஆம் ஆண்டு மத்திய அரசு அறிவித்தது. 2021 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் OBC களை கணக்கெடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரி மகாராஷ்டிர அரசு தொடர்ந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் இந்த நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியது.

அந்த வழக்கில் இந்திய அரசின் வாதங்களில் ஒன்று: “ஓபிசியை எண்ணாமல் இருப்பது மையத்தின் நனவான கொள்கை முடிவு, அதில் நீதிமன்றம் தலையிடக்கூடாது”. இந்த வாதம் ஏற்றுக்கொள்ள முடியாதது, ஏனெனில் சாதிகளைக் கணக்கிடுவது என்பது சமூக நீதிக்கான அரசியலமைப்பு ரீதியான கட்டாயக் கொள்கை மற்றும் இடஒதுக்கீட்டுக் கொள்கைகளைப் பராமரிக்க விரிவான சாதி வாரியான தரவுகளைக் கோரும் உச்ச நீதிமன்றத்தின் பல அரசியலமைப்பு பெஞ்சுகளின் முந்தைய தீர்ப்புகளிலிருந்து பெறப்பட்ட சட்டப்பூர்வ கட்டாயமாகும். எனவே, 2021 டிசம்பரில் மகாராஷ்டிர அரசின் மனுவை தள்ளுபடி செய்து உச்ச நீதிமன்றத்தின் 2 பேர் கொண்ட பெஞ்ச் அளித்த தீர்ப்பு கேள்விக்குரியது மற்றும் ரத்து செய்யப்பட வேண்டும்.

### முன்னோக்கிச் செல்லும் வழி என்ன?

SECC2011 இன் தோல்விகளில் இருந்து பாடம் எடுத்துக்கொண்டு, 1948 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டம், ஜாதி அடிப்படையிலான கணக்கெடுப்பைக் கட்டாயமாக்குவதற்குத் திருத்தப்பட வேண்டும். அதை மத்திய அரசின் விருப்பத்திற்கு விடக்கூடாது. வழக்கமான மக்கள் தொகை கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையரால் சாதிக் கணக்கெடுப்பு செய்யப்பட வேண்டும். வினாத்தாளில் சாதி தொடர்பான சில தொடர்புடைய கேள்விகள் சேர்க்கப்பட வேண்டும்.

கூடுதலாக, இந்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் குறிப்பிட்ட சாதிகளின் வரைவுப் பட்டியலைத் தயாரிக்க சமூகவியல்/மானுடவியல் நிபுணர்களை நியமிக்க வேண்டும், ஆன்லைனில் வரைவுப் பட்டியலை வெளியிட வேண்டும், இறுதி செய்வதற்கு முன் பொதுமக்களிடமிருந்து பரிந்துரைகள் மற்றும் கருத்துகளை அழைக்க வேண்டும் கணக்கெடுப்பாளர்கள். கேள்வித்தாளில் துணை சாதி, சாதி, பெரிய சாதிக் குழுவின் பெயர்கள் மற்றும் பதிலளிப்பவரின் சாதி குடும்பப்பெயர் ஆகியவற்றைக் கேட்கும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். இணையம் இயக்கப்பட்ட கையடக்க சாதனம் இந்த விவரங்களுடன் முன்பே ஏற்றப்பட்டு, சரியான விருப்பத்தைத் தேர்ந்தெடுப்பதில் கணக்கீட்டாளரின் பங்கைக் கட்டுப்படுத்துவது பணியை எளிதாகவும் பிழையின்றியும் செய்யும்.

2021 தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய ஆர்வமுள்ள மாநிலங்கள் உச்ச நீதிமன்றத்தை நாட வேண்டும்.

OBC இடஒதுக்கீட்டிற்கு 1931 மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் தரவையும் EWS இடஒதுக்கீட்டிற்கான பூஜ்ஜிய அனுபவத் தரவையும் நம்பியிருப்பது கேலிக்குரியது. அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பில் அனைத்து சாதியினரும் கணக்கிடப்பட வேண்டும்.

இவ்வாறு அசோக் வர்தன் ஷெட்டி ஐ.ஏ.எஸ். (ஓய்வு) குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி “இல்லந்தோறும் இளைஞர் அணி” உறுப்பினர் சேர்க்கை முகாம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் மாநகரம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் மற்றும் ஊராட்சி பகுதிகளில் தினந்தோறும் நடைபெற்று வருகிறது. அந்த வகையில், கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி, அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், மைலாடி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மைலாடி பேரூர் செயலாளர் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் சேர்க்கை முகாமினை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார். அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.மதியழகன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஞா.பொன்ஜான்சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் பேரூர் செயலாளர்கள் இளங்கோ, முத்து, ஐயப்பன், மகேஷ் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# உச்சநீதிமன்ற நீதிபதிகளாக கோட்டீஸ்வர் சிங், மகாதேவன் பதவியேற்பு!

## தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்!

*புதுடெல்லி, ஜூலை 19-*

*உச்சநீதிமன்ற நீதிபதிகளாக என்.கோட்டீஸ்வர் சிங், ஆர்.மகாதேவன் ஆகிய இருவரும் நேற்று பதவியேற்றனர்.*

*ஜம்மு காஷ்மீர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி என்.கோட்டீஸ்வர் சிங், சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி ஆர்.மகாதேவன் ஆகிய இருவரையும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்க ஒன்றிய அரசுக்கு கொலீஜியம் அமைப்பு பரிந்துரை செய்திருந்தது. இதனையேற்ற ஒன்றிய அரசு, இருவரின் பெயர்களையும் குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தது.*

*இதனையேற்று என். கோட்டீஸ்வர் சிங், ஆர். மகாதேவன் ஆகிய இருவரையும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.*

*இந்நிலையில், கோட்டீஸ்வர் சிங் மற்றும் ஆர். மகாதேவன் ஆகிய இருவரும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நேற்று பதவியேற்றனர். உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், கோட்டீஸ்வர் சிங் மற்றும் மகாதேவனுக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் பதவிப் பிரமாணம் செய்தார். புதிய நீதிபதிகள் பதவியேற்றதை தொடர்ந்து உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கை 34 ஆக உயர்ந்துள்ளது.*

*சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக இருந்த மகாதேவன், உச்சநீதிமன்ற நீதிபதியாக பொறுப்பேற்ற நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய பொறுப்பு தலைமை நீதிபதியாக கிருஷ்ணகுமார் பதவியேற்றுக் கொண்டார்.*

## நடப்பாண்டு கணினி அறிவியல் பொறியியல் படிப்புகளில்

# 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் அதிகரிப்பு!

## அண்ணா பல்கலைக் கழகம் தகவல் !

*சென்னை, ஜூலை 19-*

*நடப்பு ஆண்டு கணினி அறிவியல் பொறியியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய படிப்புகளில் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அண்ணா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.*

*அண்ணா பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், 2024-25ம் கல்வி யாண்டு அண்ணா பல்கலைக் கழக கட்டுப்பாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் கணினி அறிவியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய படிப்புகளில் 22 ஆயிரத்து, 248 இடங்கள் அதிகரிக்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதேபோல், எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்கல், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் உள்ளிட்ட 3 பொறியியல் பிரிவுகளில் ஆயிரத்து 147 இடங்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளன. அதேவேளையில், சிவில், மெக்கானிக்கல் உள்ளிட்ட பிரிவுகளில் 2 ஆயிரத்து 965 இடங்கள் குறைக்கப்பட்டுள்ளன. மேலும், ஆர்க்கிடெக்சர் பிரிவில் 390 இடங்கள் குறைக்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக பொறியியல் கல்லூரிகளில் மொத்த இடங்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 10 ஆயிரத்திலிருந்து, 2 லட்சத்து 30 ஆயிரம் ஆக அதிகரித்துள்ளது.*

*மேலும், பி.இ எலக்ட்ரிக்கல் மற்றும் கணினி அறிவியல், பி.இ. எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கணினி அறிவியல் மற்றும் இளநிலை டிசைனிங் படிப்புகளை புதிதாக தொடங்கிடவும் அண்ணா பல்கலைக்கழகம் அனுமதி வழங்கியுள்ளது. சிறப்பான தேர்ச்சி விகிதம் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளை கொண்டுள்ள பொறியியல் கல்லூரிகளுக்கு மட்டும் கூடுதல் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதாகவும், இதன் மூலம் அதிகப்படியான மாணவர்கள் இந்த படிப்புகளில் சேர முடியும் என்றும் அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் வேல்ராஜ் தெரிவித்துள்ளார்.*

## கொளத்தூர் அஞ்சுகம் நகரில் ‘சிறகுகள்’ மகளிர் நல முன்னேற்றச் சங்கம் சார்பில்

# கலைஞர் பாடல்கள் 12 மணி நேரம் பாடி உலக சாதனை!

*சென்னை, ஜூலை 19 -*

*சென்னை கொளத்தூர் அஞ்சுகம் நகரில் உள்ள தனியார் மகாலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாளை முன்னிட்டு சிறகுகள் மகளிர் நல முன்னேற்ற சங்கம் மற்றும் சாரா ரிதம்ஸ் சார்பாக கலைஞரின் கைவண்ணத்தில் உருவான திரைப்படப் பாடல்களை இடைவிடாது 12 மணி நேரம் தொடர்ந்து 101 பாடல்களை 25 பாடகர்கள் குழுவாக இணைந்து பாடி உலக சாதனை படைத்துள்ளனர்.*

*இந்நிகழ்ச்சி சிறகுகள் மகளிர் நல முன்னேற்ற சங்க இயக்குனர் திருமதி சாரதா தலைமையிலும் மற்றும் சிறகுகள் மகளிர் சங்கம் செயலாளர் பி. தேவி துணைச் செயலாளர் ஷ்யாமா ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.*

*நிறைவாக யுனிவர்சல் அச்சிவர்ஸ் புக் ஆப் ரெகார்ட்ஸ் மற்றும் ஃபியூச்சர் கலாம் புக் ஆப் ரெகார்ட்ஸ் நிறுவனத்தினர் சிறகுகள் மகளிர் நல முன்னேற்ற சங்கம் இயக்குனர் மூ.சாரதாவுக்கு உலக சாதனை சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தனர்.*

*இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சின்னத்திரை நடிகர் அசோக் பங்கேற்றார்.*



நெல்லை மாநகர தி.மு.க சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் விழா தொடர் 101 நிகழ்வாக நடைபெற்று வருகிறது.அதன்படி 16வது வட்ட கழக மாரிமுத்து ஏற்பாட்டில் நெல்லை டவுன் உழவர் சந்தை அருகில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் வைத்து 101 நபர்களுக்கு தையல் மிஷின், பாய்,தலையணை, பாத்திரங்கள் போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் அப்துல் கையூம், அன்டன் செல்லத்துரை,லெனின், ஸ்டார் முருகன், கேபிள் குமரேசன், சிவா, மைக் மணி,மில் ஜே.குமார், பத்மா, சௌந்தரம், மேரி, பிந்து, ராஜேஸ்வரி, ஷெட்டி, மகாராஜன், செந்தில்குமார், கணேச பெருமாள், ராமச்சந்திரன், சுப்ரித் சுப்பிரமணியன், அந்தோணி ராஜ், வினோத், நெல்லையப்பன், ராஜகோபால், வேலாயுதம், பாபநாசம், சங்கர், செல்வ பெருமாள், ஐகோர்ட் மகாராஜா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.